மாண்புமிகு திரு செ. மாதவன் : அதைத்தான் சொன்னேன். ஜெனரேட்டர்களுக்கு வேண்டிய ஆயிலுக்கு இப்போது பஞ்சம் ஏற்பட்டு விட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதுவரை போட்ட விண்ணப்பங்களின் பேரில் எவ்வளவு ஜெனரேட்டர்கள் இம்ப்போர்ட் ஆகியிருக்கின்றன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : 81-க்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

Institute for Physically Handicapped.

*Q. 286—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any Institute to assist the Physically Handicapped in this State ; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : பொருளாதார நிலையில் பின்தங்கிய உடல் ஊனம் உற்றவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இவ்வித இன்ஸ்டிடியூட்டை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்கு இன்ஸ்டிடியூட் தேவையில்லை. அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கொடுக்கிற தொழில்களைத் தொடங்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : உடல் ஊனமுற்றவர்களுக்கு முதியோர் பென்ஷன் கூடக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்வதற்காக சமீபத்தில் முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தபடி ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : உடல் ஊனமுற்றவர்களுக்குத் தனியார் துறையில் கொஞ்சம் வேலை கொடுக்கிறார்கள். அவர்களை கட்டாயப்படுத்த அதிகாரமில்லை. அரசாங்கமே சிறு சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து இவர்களுக்கு வேலை கொடுக்கலாமா என்ற முறையில் முயற்சி எடுத்து வருகிறது.